
## கல்விக்கண் திறந்த

# காமராசர்


### வாழ்க்கை வரலாறு



MINERVA PUBLICATIONS

Scanned by CamScanner

# 1. காமராசரின் பிறப்பும் கல்வியும்



இன்றைய விருதுநகர்தான் அன்று விருதுப்பட்டியாக இருந்தது.

விருதுப்பட்டியில் குமாரசாமி, சிவகாமி அம்மாள் தம்பதியருக்கு 1903-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பதினைந்தாம் நாள் பிறந்தவர்தான் பெருந்தலைவர் காமராசர்.



Scanned by CamScanner

# 5. காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராதல்

1940-ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவர் தேர்தல் நடைபெற்றபோது சத்தியமூர்த்தி, காமராசரைத் தலைவர் தேர்தலில் நிற்கவேண்டுமென்று கூற, அதற்குக் காமராசரும் சம்மதம் தெரிவித்தார்.

காமராசரை எதிர்ப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்ட இராஜாஜி, அவருக்கு எதிராக கோவை ச.பி.சுப்பையா என்பவரை நிறுத்தினார்.

எப்படியும் காமராசரைத் தோற்கடிக்க வேண்டும் என்று இராஜாஜி தீவிரமாகப் பாடுபட்டார். இராஜாஜியின் ஆதரவாளர்கள் இரவு பகல் என்று பாராமல் உழைத்து வந்தார்கள். சுப்பையாவிடம் காமராசர் தோற்றுவிடுவார் என்று இராஜாஜியின் ஆதரவாளர்கள் மகிழ்ச்சியுடன் கூறிவந்தார்கள்.

ஆனால், காமராசர் எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. சுப்பையா வெற்றி பெற்றால்



Scanned by CamScanner

# 6. நகர சபைத் தலைவராகக் காமராசர்

காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராகக் காமராசர் வந்ததும், அவர், தம்முடைய அதிகாரத்தைக் கொண்டு பதினைந்து செயற்குழு உறுப்பினர்களை நியமனம் செய்தார். மிகவும் பெருந்தன்மையுடன் இராஜாஜியின் அணியிலுள்ளவர்களையும் பங்குபெறச் செய்தார். இவ்விதம் செய்வார் என்று இராஜாஜி அணியினர்கூட எதிர்பார்க்கவில்லை.

1940-ம் ஆண்டு 'தனிநபர் சத்தியக்கிரகம்' செய்யக் காந்தியடிகள் முடிவு செய்து அறிவிப்பும் வெளியிட்டார்.

சத்தியாகிரகத்தில் ஈடுபடும் புது நபர்கள் பற்றிக் காந்தியடிகள் அறிய விரும்பினார்.


எனவே, ஒரு பட்டியலைத் தயாரித்துக் கொண்டு காந்தியடிகளைப் பார்க்கச் சென்றபோது காமராசர் கூடூர் ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

# 10. தமிழகத்தின் முதல்வரானார் காமராசர்

காமராசர், 1954-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் நாள் அதாவது, தமிழ்ப் புத்தாண்டு அன்று தமிழக முதல்ராகப் பதவியேற்றார்.

இதனால் குலக்கல்வித் திட்டம் என்ற கோணல் திட்டம் ஒழியவும், அனைவரும் இலவசக் கல்வி பெற்று படித்து முன்னேறவும் வழி பிறந்தது.

எத்தனையோ உருப்படியான திட்டங்களைத்





Scanned by CamScanner

# 12. காமராஜ் திட்டம்

தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் காங்கிரசின் செல்வாக்கு நாளடைவில் குறைந்து வந்தது போன்ற மாயை ஏற்பட்டது. இவ்விதம் ஒரு நிலை ஏற்பட்டதும் காமராஜ் போன்ற காங்கிரஸ் தலைவர்கள், காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தவர்கள் உண்மையிலும் பெரிதும் வருந்தினார்கள். காங்கிரஸ் இயக்கத்தின் செயல்பாடுகளில் தொய்வு ஏற்படக் கூடாது என்று எண்ணிய காமராசர் இதற்கு என்ன செய்யலாம் என்று தீவிரமாக எண்ணவும், நம்மைப் போன்றவர்கள் பதவியிலிருந்தும் விலகி



இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டால் என்ன என்ற எண்ணமுடன் செயல்பட ஆரம்பித்தார்கள்.

இவ்விதம் செயல்படுவதற்காக இவர் சிந்தித்து முடிவெடுத்த உயரிய திட்டமே காங்கிரஸ் தலைவர்களால் மட்டுமன்றி பண்டித நேரு அவர்களாலும் 'காமராஜ் திட்டம்' என்று போற்றப்பட்டது.

அனைவரும் மந்திரிகளாக வேண்டும்,

## 14. கல்விக் கண் திறந்த காமராசர்


வசதி படைத்தவர்கள் எவ்விதமும் படித்து முன்னேறி விடுவார்கள். ஆனால், ஏழைகளின் நிலைமை என்னாவது என்று எண்ணிப் பார்த்த காமராசர் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டார். ஆம், ஏழைகளுக்கு எழுத்தறிவிக்கப் புறப்பட்டார். மகத்தான வெற்றியும் பெற்று மகிழ்வடைந்தார்.

"கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஏற்படாத மறுமலர்ச்சியும் விழிப்புணர்வும் இப்போதுதான் ஏற்பட்டுள்ளது. வெள்ளைக்காரன் ஆட்சியில் நூற்றுக்கு ஏழு பேர்தான் படித்திருந்தார்கள். இப்போது காமராசர்

# 15. காமராசரின் மறைவு

பிரதமர் இந்திராகாந்தி நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று 1975 ஜூன் பன்னிரண்டாம் நாள் அலகாபாத் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இது அரசியலில் பெரிய பதற்றத்தை உண்டு பண்ணியது.

இந்திராகாந்தி இந்தத் தீர்ப்பை ஏற்றுப் பதவி விலக வேண்டும் என்று ஜெயப்பிரகாஷ்



காமராசர் படுக்கையில் ஓய்வு பெற்று வருகிறார் என்பதையும், அவர் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என்பதையும் அறிந்த முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் காமராசர் இல்லத்திற்கு வந்து உடல்நலம் பற்றி விசாரித்து விட்டுச் சென்றனர்.

அப்போது அவருக்குச் சிறிது காய்ச்சல் இருந்தது, தமிழ்நாட்டு ஆளுநர் கே.கே. ஷா காமராசர் படுக்கையில் இருப்பதையறிந்து அவரது இல்லம் சென்று பார்த்து வந்தார். மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம், முன்னாள் மத்திய அமைச்சர் ஓ.வி.அளகேசன் ஆகியோரும் சென்று பார்த்து வந்தனர். பார்வையாளர்கள் யாரையும் பார்த்துப் பேச வேண்டாமென்றும் பூரண ஓய்வு எடுக்க வேண்டும் என்றும் டாக்டர்கள் கூறினர்.

அவர் ஜூன் மாதம் வரை ஓய்வு ஒழிவின்றித் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் சுற்றுப் பயணம் செய்து காங்கிரஸ் காட்சிக்காக நிதி சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

தம்முடைய எழுபத்திரண்டாவது பிறந்த

Scanned by CamScanner